உ

# ஸ்ரீமத் பொன்னம்பல சுவாமிகள்
# 188 - ஆம் ஆண்டு
# மகா குருபூஜை விழா

பிலவ வருடம் மாசி மாதம் 15-ஆம் நாள்
(27.02.2022) ஞாயிற்றுக்கிழமை
உத்தராடம் நட்சத்திரத்தன்று

# சிவபுராணம் மற்றும்
# திருநந்திதேவர் பிரதோஷ வழிபாட்டு
# அர்ச்-சனை போற்றி

**திருக்கயிலாய பரம்பரை**
**மெய்கண்ட சந்தான மரபு திருவண்ணாமலை**
**துறையூர், திருமுதுகுன்றத்து**
**வீரசைவ ஆதினம் 24-ஆம் பட்டத்து**
**சீர்வளர்சீர் இரத்தின வேலாயுத**
**சிவப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள்**
அவர்களின் அருளாசியுடன் வெளியிடப்பட்டது

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியதே-எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னும் தேன்

## சிவபுராணம்

நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று
அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன், அநேகன், இறைவன், அடி வாழ்க!
வேகம் கெடுத்து ஆண்ட
வேந்தன் அடி வெல்க!
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன்
பெய்கழல்கள் வெல்க!

புறத்தார்க்குச் சேயோன்தன்
பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உள்மகிழும்
கோன் கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும்
சீரோன் கழல் வெல்க!
ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!
தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப்பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி!
சீர் ஆர் பெருந்துறை நம்தேவன் அடி போற்றி!
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி!
சிவன், அவன் என் சிந்தையுள்
நின்ற அதனால்,
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை,
முந்தை வினை முழுதும்
ஓய, உரைப்பன் யான்
கண்ணுதலான், தன்கருணைக்
கண்காட்ட, வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி:
விண் நிறைந்து, மண் நிறைந்து,
மிக்காய், விளங்கு ஒளியாய்!

எண் நிறைந்து, எல்லை
இலாதானே! நின் பெருஞ்சீர்,
பொல்லா வினையேன்
புகழுமாறு ஒன்று அறியேன்:
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்
பிறந்திளைத்தேன்: எம்பெருமான்!
மெய்யே, உன் பொன் அடிகள்
கண்டு, இன்று வீடு உற்றேன்:
“உய்ய”, என் உள்ளத்துள்,
ஓங்காரம் ஆய் நின்ற
மெய்யா! விமலா! விடைப் பாகா! வேதங்கள்
“ஐயா” என, ஓங்கி,
ஆழ்ந்து, அகன்ற, நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்!
இயமானன் ஆம் விமலா!
பொய்யாயின
எல்லாம் போய் அகல, வந்தருளி,
மெய்ஞ்ஞானம் ஆகி,

மிளிர்கின்ற மெய்ச் சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன்
இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை
அகல்விக்கும் நல்அறிவே!
ஆக்கம், அளவு, இறுதி,
இல்லாய், அனைத்து லகும்
ஆக்குவாய், காப்பாய்,
அழிப்பாய், அருள் தருவாய்,
போக்குவாய், என்னைப்
புகுவிப்பாய் நின் தொழும்பின்:
நாற்றத்தின் நேரியாய்:
சேயாய்! நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே!
கறந்தபால், கன்னலொடு
நெய்கலந்தாற் போலச்
சிறந்த, அடியார் சிந்தனையுள்
தேனூறி நின்று,
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்துடையாய்!
விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான்!
வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை,

அறம், பாவம், என்னும்
அரும் கயிற்றால் கட்டி,
புறம் தோல் போர்த்து, எங்கும்
புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப்புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால், விமலா, உனக்குக்
கலந்த அன்பு ஆகிக் கசிந்து உள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி,
நிலந்தன் மேல் வந்தருளி, நீள் கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே!
மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேனார் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்று அறுத்துப்பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து, நெஞ்சில் வஞ்சம் கெட,
பேராது நின்ற
பெரும் கருணைப் பேர் ஆறே!
ஆரா அமுதே! அளவு இலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி, என் ஆருயிராய் நின்றானே!
இன்பமும், துன்பமும்
இல்லானே! உள்ளானே!
அன்பருக்கு அன்பனே!

யாவையுமாய், அல்லையுமாம்
சோதியனே! துன் இருளே!
தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம், நடுவாகி, அல்லானே!
ஈர்த்து என்னை, ஆட்கொண்ட
எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால்
கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கு அரிய நோக்கே!
நுணுக்கு அரிய நுண் உணர்வே!
போக்கும், வரவும்,
புணர்வும், இலாப் புண்ணியனே!
காக்கும் எம் காவலனே!
காண்பு அரிய பேர் ஒளியே
ஆற்று இன்ப வெள்ளமே!
அத்தா! மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச்
சொல்லாத நுண் உணர்வாய்,
மாற்றமாம் வையகத்தின்
வெவ்வேறேவந்து, அறிவாம்
தேற்றனே! தேற்றத்
தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண் ஆர்

அமுதே! உடையானே!
வேற்று விகாரவிடக்கு உடம்பின் உள் கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா, அரனே ஓ
என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து,
பொய் கெட்டு, மெய்யானார்
மீட்டு இங்கு வந்து,
வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக்
கட்டழிக்க வல்லானே!
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே!
தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே! ஓ! - என்று,
சொல்லற்கு அரியானைச்
சொல்லித் திருவடிக் கீழ்ச் சொல்லிய பாட்டின்
பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார்
சிவன் அடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

# திருநந்தி தேவர் பிரதோஷ வழிபாட்டு அர்ச்சனை போற்றி

1. ஓம் அதிகார நந்தி போற்றி!
2. ஓம் விடையூரும் விமல நந்தி போற்றி!
3. ஓம் ஐயாற்று அருள் நந்தி போற்றி!
4. ஓம் கானப்பேர் காளையாம் நந்தி போற்றி!
5. ஓம் வீரசைவ சிவப்பிரகாச நந்தி போற்றி!
6. ஓம் கல்லை கடலையாக்கிய நந்தி போற்றி!
7 ஓம் சிறப்புடைய செங்கோட்டு நந்தி போற்றி!
8. ஓம் திசைவிலகி அருளும் திருப்புன்கூர் நந்தி போற்றி!
9. ஓம் ஆதியிலும் அனாதியான அருள்நந்தி போற்றி!
10. ஓம் அனாதியிலும் ஆதியான திருநந்தி போற்றி!
11. ஓம் திருவுடைய தீதிலா திருநந்தி போற்றி!
12. ஓம் வாதனையை ஒழிக்கும் வலிமைநந்தி போற்றி!
13. ஓம் கலை ஞானம் அருளும் கற்பகநந்தி போற்றி!
14. ஓம் செம்பொருளாகமம் உணர்த்தும்நந்தி போற்றி!
15. ஓம் நம்பவம் அறுக்கும் நள்ளாற்று நந்தி போற்றி!
16. ஓம் அங்கணன் கயிலை காக்கும் அதிகார நந்தி போற்றி!
17. ஓம் நம்குரு மரபுக்கெல்லாம் முதற்குரு நந்தி போற்றி!
18. ஓம் நெற்றிக் கண்ணுடைய திருநந்தி போற்றி!
19. ஓம் நாற்பெருந்தோள்கொண்ட நல்ல நந்தி போற்றி!
20. ஓம் ஏழுமதில் காக்கும் எழில் நந்தி போற்றி!
21. ஓம் காலங்கள் அறிந்துவிடும் கணநாதா போற்றி!

22. ஓம் ஆலயம் காவல்காக்கும் அற்புதநந்தி போற்றி!
23. ஓம் நீறணிமேனியராய் விளங்கும் நிமல நந்தி போற்றி!
24. ஓம் மற்றவர்க்கெல்லாம் தலைமை கணநாத நந்தி போற்றி!
25. ஓம் சுரிகையும் பிரம்பும் தாங்கும் சிவசிவ நந்தி போற்றி!
26. ஓம் அற்புத கோலம் காட்டும் அருள் நந்தி போற்றி!
27. ஓம் பிஞ்ஞகன் தன்னருளைப் பேசும் பிறவா நந்தி போற்றி!
28. ஓம் உபதேசம் அளிக்கும் உயர்குரு நந்தி போற்றி!
29. ஓம் சாரூப முக்தி பெற்றசாய்க்காட்டு நந்தி போற்றி!
30. ஓம் (ஆ)நந்தி போற்றி (சந்தோஷத்தை தருபவர்)
31. ஓம் இடர்களையும் இன்னம்பர் ஈச நந்தி போற்றி!
32. ஓம் தில்லை தலத்தினிடையே விளங்கும் திருநந்தி போற்றி!
33. ஓம் அடியார் துயர் களையும் ஆனந்த நந்தி போற்றி!
34. ஓம் அமரரை வாழவைக்கும் அகிலாண்ட நந்தி போற்றி!
35. ஓம் வெண்காடர் விரும்பிய விகிர்த நந்தி போற்றி!
36. ஓம் உடைவாளும் பிரம்பும் பெற்றஉடையவர் நந்தி போற்றி!

37. ஓம் வாதுக்கு வந்து எதிர்ப்போருக்கு வழிகாட்டும் நந்தி போற்றி!

38. ஓம் பதிபசு பாசம் உணர்த்தும் பசுமலை நந்தி போற்றி!

39. ஓம் தீயோரை விரட்டும் திருமுல்லைவாயில் நந்தி போற்றி!

40. ஓம் அதிசயத்து நிற்கும் ஆவடுதுறைநந்தி போற்றி!

41. ஓம் அடியார் சொல் கேட்கும் அற்புத நந்தி போற்றி!

42. ஓம் தஞ்சையார் விரும்பும் தவமுடைய நந்தி போற்றி!

43. ஓம் செங்காட்டாங் குடிமேய சிவனருள் நந்தி போற்றி!

44. ஓம் தட்சனுக்கு சாபம் கொடுத்த தகவுடை நந்தி போற்றி!

45. ஓம் காசியில் வியாசரை தண்டித்த கணநாத நந்தி போற்றி!

46. ஓம் விரும்பும் அடியார் உளத்தே நிற்கும் உயர்வுடை நந்தி போற்றி!

47. ஓம் வஞ்சனை–பொய் நீக்கியோர் உள்நிற்கும் உன்னத நந்தி போற்றி!

48. ஓம் தோஷங்களை நீக்கியருளும் பிரதோஷ நந்தி போற்றி!

49. ஓம் தேடித்தேடி எனை அடிமைக் கொண்ட தேவ நந்தி போற்றி!

50. ஓம் கச்சூர் ஆலக்கோயில் கொண்ட கணநாத நந்தி போற்றி!

51. ஓம் திருமயிலை தலத்திடையே விளங்கும் திருவுடை நந்தி போற்றி!

52. ஓம் மணிமொழியாய் அவதரித்த மாண்புடைய நந்தி போற்றி!

53. ஓம் கிளிமொழியார் கூடலை விரும்பா துறவு நந்தி போற்றி!

54. ஓம் கல்வி நலம் தரும் காழிப்பதி நந்தி போற்றி!

55. ஓம் திருமாளிகைத் தேவர் சொல் கேட்கும் மாண்புடைய நந்தி போற்றி!

56. ஓம் செழுமறையின் அகப்பொருளை அருளும் சிவ நந்தி போற்றி!

57. ஓம் உத்தரகோசமங்கை விரும்பி வாழும் உன்னத நந்தி போற்றி!

58. ஓம் புலர்ந்த காலை, மாலை புனிதனாரை வணங்கும் புண்ணிய நந்தி போற்றி!

59. ஓம் அந்தணர் பிரியாத சிற்றம்பலம் மேவும் சிவ நந்தி போற்றி!

60. ஓம் சீரடைந்த கோயில் மேவும் சேய்ஞ்சலூர் நந்தி போற்றி!

61. ஓம் நம்ஆம்தவனப்பொடி அணிவார்க்கு அருளும் ஆனிரை தலைமை நந்தி போற்றி!

62. ஓம் தொண்டர் தமைப்பிரியா தொண்டு நந்தி போற்றி!

63. ஓம் வண்டு பண்பாடும் புகலூர் வர்த்தமானீச்சர நந்தி போற்றி!

64. ஓம் நரைகுருகுக்கு அருளும் நனிபள்ளி நந்தி போற்றி!

65. ஓம் ஆவியுள்நின்று அருள் செய்யும் அற்புத நந்தி போற்றி!

66. ஓம் கண்ணாய் உலகம் காத்து நிற்கும் காவிரி நந்தி போற்றி!

67. ஓம் சித்தம் ஒன்றவைக்கும் சிவனருள் கோயில் நந்தி போற்றி!

68. ஓம் சம்பந்தன் தமிழ் கேட்கும் சாய்க்காட்டு நந்தி போற்றி!

69. ஓம் வெண்காட்டில் விடைகாட்டும் கொடியான விமல நந்தி போற்றி!

70. ஓம் இறைவன் கழல் என்றும் ஏத்தும் இனிய நந்தி போற்றி!

71. ஓம் வெந்த வெண்நீறு விரும்பி பூசும் வேட்கள நந்தி போற்றி!

72. ஓம் பண்ணிசைந்த பாடல் கேட்கும் பழியிலா நந்தி போற்றி!

73. ஓம் சீறா வருகாலன் சினத்தை அழிக்கும் சிவ நந்தி போற்றி!

74. ஓம் சிலையான் எருக்கத்தம் புலியூர் மேவும் சிவ நந்தி போற்றி!

75. ஓம் முத்திதரும் உயர்முதுகுன்றம் மேவும் உத்தம நந்தி போற்றி!

76. ஓம் வாசமலர் தூவும் அடியார் பாசம் களையும் பாபநாச நந்தி போற்றி!

77. ஓம் மூவாமுனிவர் வந்து வணங்கும் முதுகுன்றநந்தி போற்றி!

78. ஓம் தேடும் அடியார் சிந்தையுள்ளே திகழும் நந்தி போற்றி!

79. ஓம் மலைமகளும் தானும் மகிழ்ந்து போற்றும் மகாநந்தி போற்றி!

80. ஓம் ஆரும் சோலைநெல்வாயில் அரத்துறைஅடிகள் நந்தி போற்றி!

81. ஓம் செல்வத்திரு நாரையூர் கைதொழும் செல்வ நந்தி போற்றி!

82. ஓம் பூசனை செய்து இனிதே இருக்கும் புள்ளிருக்கு நந்தி போற்றி!

83. ஓம் அந்தமிலா அடியார்க்கு அருளும் ஆனந்த நந்தி போற்றி!

84. ஓம் சிவனார் மனம் குளிர வைக்கும் சீலமுடைய நந்தி போற்றி!

85. ஓம் நாயகனார் நடம் மகிழும் நற்றவமுடைய நந்தி போற்றி!

86. ஓம் நட்டம் பயின்றாடும் நாதனார் திருவடி வணங்கும் நந்தி போற்றி!

87. ஓம் விடைவென்றிக்கொடி அதனில் மேவ நின்றநந்தி போற்றி!

88. ஓம் வெந்துயரம் தீர்த்து எனை ஆண்ட வேள்வி நந்தி போற்றி!

89. ஓம் நலம் திகழவேண்டி நாடொறும் திருவையாறு பணியும் நந்தி போற்றி!

90. ஓம் ஆலந்துறை சோற்றுத் துறை பூந்துறை விரும்பிய நந்தி போற்றி!

91. ஓம் மயிலாடுதுறை, கடம்பந்துறை, ஆவடுதுறை ஆட்சி செய்யும் நந்தி போற்றி!

92. ஓம் இராமமச்சரம் என்று ஏத்தி மகிழும் நந்தி போற்றி!

93. ஓம் மறைக்காடு, வண்பொழில் சூழ்தலைச் சங்காடு சார்ந்த நந்தி போற்றி!

94. ஓம் சிராப்பள்ளி செம்பொன் பள்ளியில் சீராக அமர்ந்த நந்தி போற்றி!

95. ஓம் கோத்திட்டை, குறுக்கை வீராட்டானம் குடிவாது வந்த நந்தி போற்றி!

96. ஓம் நறையூரும், நல்லூரும், நல்லாற்றூரும் நலமாக இருந்த நந்தி போற்றி!

97. ஓம் துறையூர், ஓமாம் பூலியூர் ஒற்றியூர்
ஒப்பனையாய் இருந்த நந்தி போற்றி!

98. மறையோதும் அந்தணர்வாழ் மணிக்கோயில்
இருந்த நந்தி போற்றி!

99. ஓம் திருக்கோயில் தலமெல்லாம் சூழ்ந்து காக்கும்
கணநாத நந்தி போற்றி!

100. ஓம் குடவாயில் புனவாயில் புகுவாரை வினை
புகாமல் காக்கும் நந்தி போற்றி!

101. ஓம் கொக்கிறகும் கூவிளமும் புனைந்த புண்ணிய
நந்தி போற்றி!

102. ஓம் இடைமருதை இடமாக்கி இருந்தநந்தி போற்றி!

103. ஓம் ஆலாலம் அருநஞ்சும் அமுதாக்கொண்டானை
ஏந்திய நந்தி போற்றி!

104. ஓம் குடமுழு நந்தீசன் என்னும் பேர் பெற்றநந்தி
போற்றி!

105. ஓம் சிவசிவ சிவசிவ சிவசிவ நந்தி போற்றி!

106. ஓம் நமசிவய சிவயநம நமசிவய நந்தி போற்றி!

107. ஓம் வயநமசி சிவயநம சிவசிவ நந்தி போற்றி!

108. ஓம் போற்றி நமசிவாய சிவயசிவ நந்தி போற்றி!

109. ஓம் சிவ நந்தி போற்றி! சிவ நந்தி போற்றி!

திருச்சிற்றம்பலம்

அச்சிட்டோர் :
**அம்மன் பிரிண்டர்ஸ்,** மறைமலைநகர். 9443995861